# திமிறி எழட்டும்........

**28.02.2025 அன்று சென்னை, கொட்டிவாக்கத்தில் நடைபெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் விழாவில், தலைவர் குறித்துப் பாடிய கவிதை)**



பிறந்த நாளிலும் உன்னை வாழ்த்திடச்
சிறந்த தருணம் வாய்த்திட வில்லை!
நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்
வாளும் வேலுமாய் வந்திடும் பகைகள்

ஆட்சிக்கு வந்த அன்றே கொடுங்கோல்
ஆட்சி புரிந்தது கொரானா எனும்நோய்!

இறுக்கம் முகத்தில் இரக்கம் நெஞ்சில்
உறக்கம் இன்றியே உழைத்தாய் தலைவா!

கொடிய நோயில் வாடிய மக்களைக்
கடிதில் சென்று கண்டாய் நேரில்!

காப்புடை அணிந்து களத்தில் இறங்கினாய்
போய்ப் புகுந்தாய்நீ அதே வார்டில்

எந்த உடையிலும் அன்றுநீ அணிந்த
அந்த உடையே அற்புதம் தலைவா!

அதற்குப் பின்னும் ஆயிரம் சிக்கல்கள்
எதற்கு வம்பென்று ஒதுங்கிட வில்லை!

எத்தனை எத்தனை எதிரிகள் முளைத்தார்
எத்தனை எத்தனை இன்னல் விளைத்தார் !

அததனை யும்தூள் தூளாக்கி விட்டு
அண்ணாவைப் போல் அமைதி காக்கிறாய்!

வாழ்வின் சுவைகளை மறந்தே நானும்
சூழ்நிலைக் கைதி ஆனேன் என்றும்

முதலமைச்சர் பதவியும் பொறுப்பும் தலையில்
முள்ளின் மகுடமாய் உறுத்துவ தாகவும்

அன்றே சொன்னார் அறிஞர் அண்ணா
இன்றோ அதனை நேரில் பார்க்கிறோம்!

எக்கணமும் எப்பொழுதும் இத்தமிழ கத்தின்
மக்களையே உன்நெஞ்சம் நினைத் திருக்க

எப்போது சிரித்தாய் எங்கள் தலைவா
எப்போ தாவது எங்கள் மழலைகள்

அப்பா என்றுனை அழைத்திடும் அந்த
அழகில் மட்டுமே மயங்கிச் சிரித்தாய்!

இப்போதும் மேடைக்கு வாழ்த்தநான் வரவில்லை
ஒப்பேதும் இல்லாத உன்றன் பின்னால்

எப்போதும் சிப்பாயாய் நிற்போம் என்றே
ஒப்புதல் கொடுப்பதற்கே ஓடி வந்தேன்!

களத்தி லேயே உன்கால்கள் நிற்பதால்
கழுத்துக்கு மாலை கொண்டுவர வில்லை!

எங்களில் ஒருவராய் நீங்கள் இருப்பதால்
உங்களைத் தனித்து வாழ்த்திட வில்லை!

இந்தித் திணிப்பு மற்றும் தொகுதி
மறுசீ ரமைப்பு என்றே இன்று

அணிவகுத் திருக்கும் ஆறாத் துயர்களைத்
துணிவுடன் எதிர்க்கும் உன்பின் நிற்போம்!

உயிராம் மொழியைக் காத்திட எங்கள்
உயிரையும் தருவதாய் உறுதி ஏற்போம்!

தென்னாட்டு மக்கள் தீராதி தீரர்
எந்நாளும் எவர்க்கும் அடிபணியார் என்றே

அத்தனை உறுதியாய் அன்றுநீ சொன்னதைச்
சித்த ராமையாவும் வழிமொழிந் துள்ளார்!

வடக்கு வாழ்ந்திட தெற்கு தேய்ந்திட
அடக்கி ஆண்டஅக் காலங்கள் மறைந்தன!

அருந்தமிழ் நாடும் ஆந்திர கேரளம்
கருநா டகமும் கைகளைச் சேர்ப்போம்!

குமுறி அழுவது கோழைகள் வீடு
திமிறி எழட்டும் திராவிட நாடு!!



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், கரூர் மாவட்ட அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் அதிவேக சைக்கிள் பந்தயம் அரசு காலனி வாங்கல் சாலையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி,. ஆண் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக முறையே முதல் பரிசு ரூ. 15000,2ம்பரிசு ரூ.12000, 3 ம்பரிசு ரூ.10ஆயிரம், கோப்பை, நான்காம் இடம் முதல் பத்தாம் இடம் வரை வந்த நபர்களுக்கு தலா ரூ 3000 மற்றும் பரிசு கோப்பை வழங்கினார்.

### நாகை மாவட்ட எல்லையான

# கீழ்வேளூரில் முதல்வருக்கு மாபெரும் வரவேற்பு!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி – என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

நாகை, மார்ச் 4 -
நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என கௌதமன் மகன் மகிபாலன் உமா மகேஸ்வரிதிருமணத்தை நடத்தி வைக்கவும், நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஐடிஐ வளாகத்தில் 38986 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகள் சார்பாக வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும், நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தை திறந்து வைக்கும் தளபதி அருவாலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியவர் சிலையை திறந்து வைக்கவும், மகளிர் விடியல் பயண புதிய பேருந்தை இயக்கி வைத்திடவும் பல்வேறு கட்டிடங்கள் திறந்து வைத்திடவும் அடிக்கல் நாட்டிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.2.2025 சென்னையிலிருந்து விமான மூலம் திருச்சி வந்தடைந்தார்.

அதைத்தொடர்ந்து சாலை மார்க்கமாக நாகைக்கு தஞ்சை திருவாரூர் வழியாக வந்த தமிழ்நாடு முதலமைச்சர் - தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட எல்லையான கீழ்வேளூர் பைபாஸ் சாலையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என். கௌதமன் ஆகியோர் தலைமையில் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே.வேதரத்தினம்,விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள் செல்லம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், க மறைமலை,மாவட்டத் துணைச் செயலாளர் ஆரூர் மணி வண்ணன், ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் கா. பழனியப்பன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், செல்லசெங்குட்டுவன், சிக்கல் ஆனந்த், ஆர். டி.எஸ்.சரவணன், உதயம் வே..முருகையன், என்.சதாசிவம், மகாகுமார், சோ. பா.மலர்வண்ணன், நகர கழக செயலாளர்கள் இராமாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை அணி துணை செயலாளர் சாகுல் ஹமீது,பேரூர் செயலாளர் கா. அட்சயலிங்கம் மாவட்ட சார்பணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி எல்.பால்ராஜ் . மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ராஜா உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வே.வாசு தலைமை!

# மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - வில்லிவாக்கத்தில் புகழரங்கம்!

### கி.வீரமணி – இரா.முத்தரசன் – எம்.எச்.ஜவாஹிருல்லா சிறப்புரை!

சென்னை, மார்ச். 4 -
சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம்-13, பொது வாழ்வில் களம் கண்டு வெல்லும் திராவிடம்! கதிர்கண்டு வணங்கும் தமிழ்இனம்!! எனும் தலைப்பில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் இன்று (4.03.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, அயன்புரம், போர்ச்சியஸ் ரோடு, ஜாயிண்ட் ஆபிஸ் அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, கூ.பி. ஜெயின் எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், ஜி.ஜெ.பிரபு, லதா வாசு எம்.சி, எம்.சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், எம்.அமுல், நா.அறிவுடைநம்பி, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, ம. ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்.

மாவட்ட பிரதிநிதிகள்: வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், தலைவர் திராவிடர் கழகம் - கி.வீரமணி, மாநில செயலாளர், சி.பி.ஐ-இரா. முத்தரசன், தலைவர் - இந்திய யூனியன் முஸ்லீம் லீக் - எம்.எச்.ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், ஒ.ஏ.நாகலிங்கம், கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி, ஆர்.வரதன், வழக்கறிஞர் இந்திரஜித், மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், எ.புனிதவதிஎத்திராசன், இசட்.ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு, சரிதாமகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி,

பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி, பி.ஜெ.துள சிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ் (எ)நீலகண்டன், எம்.இப்ராஹிம்கனி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம. அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி, வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ்பாபு, வட்ட செயலாளர்கள்: சிட்கோ சேகர் ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன் ப.லோகுபாபு, வில்லி வாக்கம் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: ஆர்.கோபாலகிருஷ்ணன், கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.தீபக்குமார், ம.சுந்தர், ஆ.சக்திவேல், சிட்கோ. பி.சுரேஷ்பாபு, பூ.சத்தி யேந்திரன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர் எ.வேதா நன்றி கூறுகிறார்.

# ஓமான் தி.மு.க. அயலக அணி சார்பில் - முதல்வர் பிறந்த நாள் விழா!

### பி.கே.சிவக்குமார் வரவேற்றார்! ஆர்.பாலமுருகன் வாழ்த்துரை! சிவ.செந்தில் தொகுப்புரை!

மஸ்கட், மார்ச். 4 -
ஓமான் தி.மு.க. அயலக அணி சார்பில் மக்கள் முதல்வர் தளபதி அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா மிக விமர்சையாக மஸ்கட் மாநகரில் நடைபெற்றது.

ஓமான் தி.மு.க. அயலக அணி செயலாளர் பி.கே. சிவகுமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

அவைத் தலைவர் ஆர். பாலமுருகன் வாழ்த்துரை வழங்கினார்.

கழகத்தின் பொருளாளர் சிவ செந்தில் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில் கழகம் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெரும் வண்ணம் ஓமான் தி.மு.க. செய்ய வேண்டிய பூர்வாங்க பணிகள் தொடர்பான அனைத்து ஆலோசனைகளும் ஓமான் தி.மு.க. நிர்வாகிகளால் ஆராயப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அயலக அணியின் உறுப்பினர் லண்டன் பைசல் கலந்து கொண்டார்.

மேலும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பர்ஷாத், பாக்கியராஜ், தினேஷ் ராஜா, மக்கீன், உசைன் அயூப்கான், ரவிசங்கர் திருமாவளவன், பாரூக், முனைவர் சுந்தர வடிவழகன் கோபாலகிருஷ்ணன் தங்கதுரை, அருண், முருகன் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் ஓமான் தி.மு.க. பல்வேறு அணியைச் சார்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் ஒன்றிய அரசால் திணிக்கப்படும் மும்மொழி கொள்கைக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தி மொழிக்கு எதிராக தமிழ்நாடு போராடும் தமிழ் வெல்லும் என்ற முழக்கங்களும், தமிழ் வாழ்க என்ற பதாகைகளுடன் உறுப்பினர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக முத்தமிழ் அறிஞரின் தவப்புதல்வர், மக்களின் முதல்வர் தளபதி அவர்களுக்கு பிறந்தநாள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

முதல்வருக்கு அனைவரின் வாழ்த்துக்களுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.



அமெரிக்கா நியுஜெர்சி மாநிலத்தில் முதலமைச்சர், திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அமெரிக்கா அயலக அணி கிழக்கு சார்பில் அமைப்பாளர் நியுஜெர்சி பாலா ஏற்பாட்டில் கழக செய்தி தொடர்புத்துறை இணைச் செயலாளர் கவிஞர் சல்மா தலைமையில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் நிகழ்வும், தமிழ்நாட்டு நலன்களையும்,தமிழ் மொழியை காக்கும் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது. இதில் துணை அமைப்பாளர்கள் இளமாறன், கோசல்,கோபி கதிர்வேல் மற்றும் சூர்யா, சன்முகவேல், பிரசாத் பாண்டியன், மகேந்திரன், சந்துரு, உதயகுமார், தனா, டாக்டர். ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா என். இராமசாமி

**மார்ச் 4 (2022)**



தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.

1976 நெருக்கடி காலத்தில் ‘ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக’ என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**